சாயிகள் எவ்வளவு நெல் கொண்டுவந்து கொடுத்தாலும், அரசாங்கம் வாங்கிக்கொள்ளத் தயாராக இருக்கிறது. விவசாயிகள் அரசாங்கம் நிர்ணயித்திருக்கிற விலைக்குக் குறைந்த அளவில் யாருக்கும் விற்கவேண்டியதில்லை. அரசாங்கம் எப்போது வேண்டுமானாலும், எவ்வளவு நெல் கொடுத்தாலும் வாங்கிக்கொள்ளுவதற்குத் தயாராக இருக்கிறது. வெளி மாவட்டங்களுக்குக் கொண்டுபோக விரும்புகிற வியாபாரிகள்தான் 50 சத வீத நெல் தர வேண்டும் என்று சொல்லியிருக்கிறோமே தவிர, விவசாயிகளுக்கு அல்ல. அது கூட தமிழகத்தில் "பஃப்பர் ஸ்டாக்" அதிகமாக இருக்கவேண்டும் என்பதன் அடிப்படையில் தான் வைக்கப்பட்டிருக்கிறது. எனவே மீண்டும் தெளிவாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அரசாங்கக் கொள்முதல் விலைக்கு விற்பதாக இருந்தால், எவ்வளவு நெல் இருந்தாலும், அரசாங்கம் வாங்கிக்கொள்ளத் தயாராக இருக்கிறது. உறுப்பினர் திரு சுவாமிநாதன் அவர்களையும் கேட்டுக்கொள்ளுவேன், அரசாங்கம் நிர்ணயித்த கொள்முதல் விலைக்கு நிறைய நெல் வாங்கிக் கொடுப்பாரானால், நான் அவருக்கு நன்றியுடையவனாக இருப்பேன். எனவே, இதைப் பற்றி விவாதிக்க சபையின் நடவடிக்கையை ஒத்திப்போட வேண்டிய அவசியமில்லை. நான் அரசாங்கத்தின் நிலையை விளக்கிச் சொல்லிவிட்டேன் என்று கூறிக்கொள்ளுகிறேன்.

The adjournment motion was not pressed.

III—CALLING ATTENTION TO HARDSHIP CAUSED TO AGRICULTURISTS OF RAMANATHAPURAM DISTRICT CONSEQUENT ON PROPOSED CONSTRUCTION OF DAM ACROSS THE VAIGAI RIVER

திரு. வி. தங்கபாண்டியன் : தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் நரசிங்கபுரம் பகுதியில் புதியதாகக் கட்டப்படவிருக்கும் அணைக்கட்டினால், வைகை அணைக்கட்டின் நீர்ப் பிடிப்புப் பகுதிக்குத் தண்ணீர் வருவது தடைப்படுத்தப்படும். அதனால் வைகை நீர்த் தேக்கத்திலிருந்து இராமநாதபுரம் மாவட்ட விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டிய அளவு தண்ணீர் கிடைக்காமல் கஷ்டத்திற்கு உள்ளாவார்கள் என்கிற அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாஷா : மதுரை மாவட்டம்,
5-10 p.m. பெரியகுளம் வட்டம், நரசிங்கபுரம் கிராமத்தில் வைகையாற்றின் குறுக்கே அணை கட்டும் செயற்குறிப்பினுக்கு அரசு 1969-ம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் ரூ. 6.43 இலட்சம் செலவில் ஒப்புதல் அளித்துள்ளது. நரசிங்கபுரம் கிராமத்தின் எல்லைக்குள் வைகையாற்றின் குறுக்கே பெரிய அணை என்னும் அணைக்கட்டு ஒன்று இருந்தது. மேற்கண்ட அணையின் வலது பக்கமாக ஒரு வாய்க்கால் ஓடி நரசிங்கபுரத்தின் வலது பக்கமுள்ள சிறு குளம், பெரிய குளங்களுக்கு நீர் வழங்கி வந்தது. இந்த அணைக்கட்டு பல்லாண்டுகளுக்கு முன்னரே சிதைந்து ஆற்றின் நீர்ப் போக்கு புது வழியாக மாறி விட்டது. அணைக்கட்டில் சிதைந்த பகுதி செப்பனிடப்படவில்லை. ஆகையால் அணைக்கட்டில் ஆற்று நீரைத் தேக்கி குளங்களுக்குத் திருப்பி அனுப்ப இயலவில்லை. மூங்கிலியாறும் மேற்கண்ட அணைக்கட்டும் சேருமிடத்தில் ஒரு புதிய அணைக்கட்டு ஒன்றை எழுப்பி பழைய அணைக்கட்டை முந்தைய நிலைக்குக் கொண்டுவருவது தற்போதைய செயற்குறிப்பின் நோக்கம். வரத்துக்காலும் புதுப்பிக்கப்படும். வினாடிக்கு 19 கன அடி நீர் எடுத்துச் செல்லும் அளவுக்கு வரத்துக்காலை அமைக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. மதுரை மாவட்ட ஆட்சியர் இச் செயற்குறிப்புக்கு இணக்கம் அளித்துள்ளார். புதிய ஆயக்கட்டு பலனடைய இந்தச் செயற்குறிப்பில் வகை செய்யப்படவில்லை. பெரியகுளம் மற்றும் சிறு குளத்தின் பதிவு செய்யப்பட்ட ஆயக்கட்டுகள்தான் பலனடையும். வைகையாற்றில் நீர் பாயும் அளவை வைத்துக் கருதும்போது, மேற்கண்ட அணைக்கு வினாடிக்கு 19 கன அடி நீர்

27th January 1970] [திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா]

திருப்பிவிடுவதால், பெருத்த அளவு பாதிக்காது. இத்திட்டத்தைச் செயல் படுத்துவதினால், இராமநாதபுரம் மாவட்ட உழவர்கள் இன்னலுக்கு உள்ளாக்கப்பட மாட்டார்கள் என்று உறுதி சொல்லப்படுகிறது.

IV—DISCUSSION ON THE GOVERNOR'S ADDRESS—*cont.*

MR. CHAIRMAN: We resume the discussion on the Governor's Address. The hon. Member Thiru T. K. Shanmugam will now speak.

* **திரு. டி. கே. சண்முகம்:** மாண்புமிகு தலைவரவர்களே, ஆளுநர் உரையின்மீது நன்றி தெரிவித்து, அதனை வரவேற்கும் முறையில் சில கருத்துக்களைச் சொல்ல எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்களின் பிரிவினால் நமக்கெல்லாம் ஏற்பட்டிருக்கும் ஆற்றொணாத் துயரத்தைச் சித்தரிக்கும் வகையில் ஆளுநர் அவர்கள் பெருமைக்குரிய வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்து நம் உள்ளங் களை உருக்கும் முறையில் அதனை வெளிப்படுத்தி தன்னுடைய உரையைத் தொடங்கி இருப்பதற்காக அவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது. என்றும் காணாத வகையில் சென்ற ஆண்டு நிலவிய பயங்கரமான வறட்சி நிலையை பொறுமையுடனும் திறமையுடனும் சமாளித்த தமிழக அமைச்ச ரவைக்கு நாம் என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறோம். ஆளுநர் அவர் களுடையஉரையில் வறட்சி நிவாரணம் பற்றி விரிவாகத் தொகுத்துக் கூறப் பட்டிருக்கிறது. அரசினர் எடுத்துள்ள முயற்சிகளையும், சாதனைகளையும் தெள்ளத் தெளிவாகச் சொல்லி இருக்கிறார். மத்திய அரசிடம் உரிமையுடனும் அதே சமயத்தில் கண்டிப்புடனும் நடந்துகொண்டு நிதி உதவி பெற்ற தமிழக முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் அவர்கள் பாராட்டிற்குரியவராவார். அடுத்தபடியாக, நெல், அரிசி போக்கு வரத்திற்குத் தடையை நீக்கி இருப்பதை நான் உளமாறப் பாராட்டுகிறேன். தடை அகற்றப்பட்டதன் காரணமாக நமது தேவைக்கு நல்ல அரிசி தாராளமாகக் கிடைக்கும் என்று நான் நம்புகிறேன். அதே நேரத்தில் சென்னை மாநகரத்திலும் கோயமுத் தூரிலும் இதுவரை இருந்து வந்தது போல ரூ. 200-க்குக் குறைந்த வருமானம் உடையவர்களுக்கு படியரிசித் திட்டத்தின் கீழ் அரிசி வழங்கப் படும் என்ற செய்தி பெரும் ஆறுதல் அளிக்கக் கூடியது. என்னுடைய வேண்டுகோள் ஒன்றையும் இந்த சமயத்தில் அரசுக்கு தெரிவிக்க விரும்பு கிறேன். கலைத்துறையில் இருப்பவர்கள் பெரும்பாலும் நிரந்தரமான வருவாய் உடையவர்களல்ல. நாடகங்களிலும், திரைப்படங்களிலும் அவ்வப் போது தான் சிறு ஊதியம் கிடைக்கிறது. சில மாதங்களில் ரூ. 300 400 வருவாய் கிடைக்கலாம். சில மாதங்களில் வருவாயே கிடைப்பதில்லை மாதம் இவ்வளவு வருவாய் என்று உறுதியாகச் சொல்ல முடியாத அவல நிலையில் தான் பெரும்பாலான கலைஞர்கள் வாழ்க்கை நடத்திக் கொண்டி ருக்கிறார்கள். எனவே கலைத்துறையில் ஈடுபட்டிருப்பவர்களின் விண்ணப் பங்களை மிகவும் பரந்த உள்ளத்தோடு கவனித்து உடனடியாக ஆவன செய்யும்படி அதிகாரிகளுக்கு ஆணை பிறப்பிக்குமாறு மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாநில சுயாட்சி பற்றிய ஆளுநர் அவர்களுடைய கருத்துக்கள் இந்த மாநிலத்திற்கு சுய ஆட்சி கோரிப் பாடுபட்டு வரும் தமிழரசுக் கழகத் தினருக்கு சிறந்த ஆதரவளிப்பதாகவும், நம்பிக்கையளிப்பதாகவும் இருக் கிறது. இதனை ஆய்வு செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ள குழுவினரின் அறிக்கையை ஆவலுடன் எதிர்பார்ப்பதாக ஆளுநர் அவர்கள் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது பொருள் நிறைந்த வார்த்தையாகும். இந்தப் பொருளையும், இன்றைய அரசாங்கத்தினுடைய துடிப்பையும் உணர்ந்து இக்குழுவினர் விரைந்து செயலாற்ற முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.